**செய்தி வெளியீடு எண்: 142** **நாள்: 21.02.2019**

# செய்தி வெளியீடு

## உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி- மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் தலைமையில் நடைபெற்றது

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின்(செய்தி மற்றும் விளம்பரம்) பணி ஆய்வுக் கூட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உள்ள கூட்ட அரங்கில் இன்று(21.02.2019) நடைபெற்றது.

இப்பணி ஆய்வுக் கூட்டத்தை தொடங்கிவைத்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் ஆற்றிய உரை,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், நலத்திட்ட உதவிகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தானப் பணியினை செய்தி மக்கள் தொடபுத்துறை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கு அனைத்து தரப்பு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களே காரணமாகும். உங்களுடைய நல்லொழுக்கமும் பங்களிப்பும் இத்துறையின் செயல்பாட்டை நிர்ணயிக்கும்.

கடந்த பிப்ரவரி 14 வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு இரண்டாண்டை பூர்த்தி செய்தது. கடந்த இரண்டாண்டுகளில் அம்மாவின் அரசு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

பொங்கல் பரிசு பெட்டகத்துடன் ரூ.1000/– ரொக்கம், வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் சுமார் 60 லட்சம் குடும்பங்களுக்கு தலா ரூ.2,000/– தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த பெருமக்கள் மற்றும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பாடுபட்ட சான்றோர்களின் நினைவை போற்றுகின்ற வகையில் அவர்களுக்கு நினைவகங்கள், மணிமண்டபங்கள், நினைவுத்தூண்கள்,

நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு மாண்புமிகு அம்மாவின் அரசு பல சாதனைகளை புரிந்துள்ளது.

இச்சாதனைகள் மற்றும் அரசின் சீரிய திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் சென்றடைந்து அவர்கள் பயன்பெறுவதை நம் துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். மாண்புமிகு அம்மா அரசின் சீரிய திட்டங்களால் பயன்பெற்றவர்களை நேரில் சந்தித்து அவர்களிடத்தில் பேட்டியெடுத்து அதனை வெற்றிக்கதைகளாக உருவாக்கி நாளிதழ்களில் வெளிவரச் செய்வது உங்களுடைய முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை தொகுத்து குறும்படங்களாக வெளியிட்டு தமிழகத்தில் அனைத்து திரையரங்குகளிலும் காட்சிப்படுத்த அனுப்பி வைக்கப்படுகிறது. இப்படங்கள் திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மாத இதழான தமிழரசு இதழுக்கு முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து அதிக அளவில் சந்தா சேர்ப்பதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டும். இத்துறையின் வீடியோ வாகனம் மூலம் செய்தி மலர்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் காண்பிப்பதற்கு திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

ஒரு அரசுத்துறை திறம்பட செயல்பட வேண்டும் என்றால் அத்துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடையே ஒற்றுமை இருக்க வேண்டும். எனவே, செய்தி மக்கள் தொடர்புத்துறையில் பணியாற்றும் நீங்கள் உங்கள் உயர் அலுவலர்களுடனும், சக அலுவலர்களுடனும் நட்பு பாராட்டி, ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத்துறை நேரடியாக பொதுமக்களோடு தொடர்புகொண்டிருப்பதால் இத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த பணிவுடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். மேலும், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களாகிய நீங்கள், உங்களை விட உயர்பதவியில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு உரிய மரியாதை செலுத்துவதோடு, அவர்களின் அறிவுரைகளை ஏற்று தங்கள் அலுவலகப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றும், கூடுதல் இயக்குநர்(செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி தெரிவித்தும் பேசினார்கள். இக்கூட்டத்தில், கூடுதல் இயக்குநர்(மக்கள் தொடர்பு) திரு. உல. இரவீந்திரன் அவர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள்(செய்தி மற்றும் விளம்பரம்) மற்றும் பிரிவு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**